வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர்—நாராயணசாமி

தேதி-4.5.2024 நேரம் மாலை 6.10 மணி

---------------------------------------------------------

<u>தலைப்புச் செய்திகள்</u>

- குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்மு, 5 நாள் சுற்றுப் பயணமாக இமாச்சல பிரதேசம் சென்றுள்ளார்.
- மக்களவை தேர்தலை முன்னிட்டு ஜார்கண்ட் மற்றும் பீகார் ஆகிய பகுதிகளில் பாஜக மூத்த தலைவரும் பிரதமருமான திரு நரேந்திரமோடி பொதுக் கூட்டங்களில் பங்கேற்றுப் பேசினார்.
- இளங்கலை மருத்துவ பட்டப் படிப்புகளுக்கான தேசிய தகுதி நுழைவுத் தேர்வான நீட் தேர்வு நாளை நாடு முழுவதும் நடைபெற உள்ளது.
- இந்திய-திபெத் எல்லைப் பாதுகாப்பு படைப் பிரிவில் பணியாற்றி வந்த காரைக்கால் திருப்பட்டிணத்தைச் சேர்ந்த இந்திய ராணுவ வீரர் பிரேம்குமார் வீரமரணம் அடைந்ததை ஒட்டி புதுச்சேரி துணை நிலை ஆளுநர் திரு சிபி ராதாகிருஷ்ணன் இரங்கல் தெரிவித்துள்ளார்.

<u>முர்மு</u>

குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்மு, 5 நாள் சுற்றுப் பயணமாக இமாச்சல பிரதேசம் சென்றுள்ளார். இன்று காலை சிம்லா சென்றடைந்த அவர் மஷோப்ராவில் உள்ள குடியரசு தலைவர் மாளிகையில் நடைபெற உள்ள உபசரிப்புகளில் பங்கேற்கிறார். நாளை குப்ரியில் உள்ள நீர்பிடிப்பு பகுதிக்கு செல்லும் அவர் மே 6-ஆம் தேதி தரம்சாலா மத்திய பல்கலைக் கழகத்தின் பட்டமளிப்பு விழாவில் தலைமை விருந்தினராக பங்கேற்று மாணவர்களுக்கு பட்டங்களை வழங்க உள்ளார். மே 7-ஆம் தேதி

சிம்லாவில் உள்ள வரலாற்று சிறப்பு மிக்க கெய்ட்டி அரங்கில் நடைபெறும் கலாச்சார நிகழ்ச்சியிலும் அவர் பங்கேற்று மறுநாள் புதுடெல்லி திரும்புகிறார். குடியரசு தலைவரின் வருகையை முன்னிட்டு சிம்லா சிட்டி, அனடேல் மற்றும் கல்யாணி ஹெலிபேட் ஆகிய இடங்களில் மத்திய பாதுகாப்பு அதிகாரிகள் உட்பட ஆயிரத்திற்கும் மேற்பட்ட போலீசாரும் பலத்த பாதுகாப்பு பணியில் ஈடுபட்டுள்ளனர்.

<u>மோடி</u>

மக்களவை தேர்தலை முன்னிட்டு ஜார்கண்ட் மாநிலம் பலாமு மற்றும் சிசாய் ஆகிய பகுதிகளில் பாஜக மூத்த தலைவரும் பிரதமருமான திரு நரேந்திரமோடி 2 பொதுக் கூட்டங்களில் பங்கேற்றுப் பேசினார். அப்போது பேசிய அவர் 2014-ஆம் ஆண்டிற்கு முன்பு ஜார்கண்ட் எல்லையில் நமது பாதுகாப்பு வீரர்கள் உயிரிழப்பு ஒவ்வொரு மாதமும் நடந்து கொண்டிருந்ததாகவும், அதே ஆண்டு மக்கள் பாஜகவை வெற்றி அடைய செய்த பின் தீவிரவாதிகளை அவர்களின் சொந்த இடத்திற்கே சென்று நாம் அழித்து விடுகிறோம் என்றும் கூறினார். பீகாரில் பிற்பகல் 3 மணிக்கு நடைபெற்ற பேரணியில் பங்கேற்ற திரு மோடி அங்கு பாஜக வேட்பாளரை ஆதரித்து தர்பங்கா ராஜ் மைதானத்தில் நடைபெற்ற பொதுக் கூட்டத்திலும் உரையாற்றினார். கடந்த 10 ஆண்டுகளில் 25 கோடி மக்கள் வறுமையில் இருந்து மீட்டகப்பட்டதாக கூறினார். 2014-ஆம் ஆண்டு மக்கள் அளித்த வாக்குகள் மூலம் இந்திய ஜனநாயகத்தின் ஆற்றலை உலகம் போற்றியதாக அவர் குறிப்பிட்டார். மக்களவை தேர்தலின் 4-ஆம் கட்ட வாக்குப் பதிவு தர்பங்கா நாடாளுமன்றத் தொகுதியிலும், உஜியாபூர், முங்கர் ஆகிய தொகுதிகளிலும் வரும் மே 13-ஆம் தேதி நடைபெற உள்ளது.

***அமித் ஷா***

குஜராத்தில் இன்று நடைபெற்ற தேர்தல் பிரச்சாரத்தில் பாஜக மூத்த தலைவரும், மத்திய உள்துறை அமைச்சருமான திருஅமித் ஷா பாஜக வேட்பாளர்களை ஆதரித்து நடைபெற்ற பேரணியில் பங்கேற்று உரையாற்றினார். எஸ்சி, எஸ்டி மற்றும் ஓபிசி பிரிவினரின் இடஒதுக்கீடு அரசியலைப்பு உரிமை என்றும், அது பாஜக அரசு உள்ளவரை இந்த இடஒதுக்கீடு இருக்கும் என்றும் அவர் கூறினார். கோவிட்-19 பெருந்தொற்றை வெற்றிகரமாக சமாளித்த பாஜக அரசு ஏழை எளிய மக்களின் நலன் மற்றும் பொருளாதார மேம்பாட்டிற்கு எப்போதும் உறுதுணையாக இருக்கும் என்று அவர் உறுதி அளித்தார்.

***பிரியங்கா காந்தி***

குஜராத் மாநிலம் பனஸ்கந்தாவில் இன்று வாக்கு சேகரிப்பில் ஈடுபட்ட காங்கிரஸ் பொது செயலாளர் திருமதி பிரியங்கா காந்தி பொது துறை நிறுவனங்களை காங்கிரஸ் வலுப்படுத்தும் என்று கூறினார். மக்களை சந்தித்து உரையாடுவதன் மூலமே அவர்களின் பிரச்சனைகளை அறிந்து கொள்கைகளை உருவாக்க முடியும் என்று கூறிய அவர் காங்கிரஸ் இந்நடைமுறையை பின்பற்றியதாக குறிப்பிட்டார். பல்வேறு கட்சிகளின் தலைவர்கள் முனைப்புடன் தேர்தல் பரப்புரையில் ஈடுபடுவதோடு வீடு தோறும் சென்று வாக்காளர்களை சந்தித்து வாக்குகளை திரட்டி வருகின்றனர்.

***மாயாவதி***

பகுஜன் சமாஜ் கட்சித் தலைவர் செல்வி மாயாவதி உத்தரபிரதேச மாநிலம் ஆக்ரா மக்களவைத் தொகுதியில் போட்டியிடும் வேட்பாளரை ஆதரித்து நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் உரையாற்றினார். பணவீக்கம் மற்றும் வேலையில்லா திண்டாட்டத்தினால் மக்கள் சிரமத்தை எதிர்கொள்வதாக அவர் குற்றம் சாட்டினார். பாஜகவின் பொருளாதாரக்

கொள்கைகளால் சிறு, குறு மற்றும் நடுத்தர தொழில்கள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளதாகவும், நாட்டில் உள்ள ஒவ்வொருவருக்கும் வேலை வாய்ப்பை வழங்குவதன் மூலம் மட்டுமே நாட்டில் வறுமையை ஒழிக்க முடியும் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

## நீட் தேர்வு

இளங்கலை மருத்துவ பட்டப் படிப்புகளுக்கான தேசிய தகுதி நுழைவுத் தேர்வான நீட் தேர்வை நாளை நாடு முழுவதும் 557 நகரங்களிலும், மற்றும் வெளிநாட்டில் உள்ள 14 நகரங்களிலும் தேசிய தேர்வு முகமை நடத்த உள்ளது. நாளை பிற்பகல் 2 மணி முதல் மாலை 5.20 வரை இத்தேர்வு நடைபெறுகிறது. 24 லட்சத்திற்கும் அதிகமான விண்ணப்ப தாரர்கள் நீட் தேர்வினை எழுத உள்ளனர். பதிவிறக்கம் செய்யப்பட்ட அனுமதி சீட்டுடன் தேர்வு மையங்களுக்கு சரியான நேரத்தில் வந்து சேருமாறு தேசிய தேர்வு முகமை விண்ணப்ப தாரர்களுக்கு அறிவுறுத்துகிறது.

ஐக்கிய அரபு நாடுகளில் இருந்து மொத்தம் 2 ஆயிரத்து 223 மாணவர்கள் நாளை நடைபெறும் நீட் தேர்வில் பங்கேற்கின்றனர். 3 நியமிக்கப்பட்ட மையங்களான அபுதாபி இந்தியன் பள்ளி, துபாயில் உள்ள இந்திய உயர்நிலைப்பள்ளி மற்றும் ஷார்ஜா இந்தியப் பள்ளியில் விண்ணப்பதாரர்கள் தேர்வு எழுத உள்ளனர்.

## தேர்தல்

மக்களவை தேர்தலுக்கான 23 நாடுகளின் தேர்தல் மேலாண்மை அமைப்புகளில் இருந்து 25 சர்வதேச பார்வையாளர்கள் இந்தியா வந்துள்ளனர். பொது தேர்தலை உயர்ந்த தரத்துடன் நடத்துவதற்கான அதன் உறுதிப்பாட்டை எடுத்துக் காட்டுவதற்கு தேர்தல் ஆணையம் இந்த பிரதிநிதிகளை ஜனநாயகத்தின் சிறப்பை நேரில் காண அழைப்பு விடுத்துள்ளது. இன்று முதல் 6 நாட்கள் நடைபெறும் பல்வேறு

நிகழ்ச்சிகளில் இப்பிரதிநிதிகள் பங்கேற்கிறார்கள். இந்தியாவின் தேர்தல் முறையின் நுணுக்கங்கள் மற்றும் உலகின் மிகப் பெரிய ஜனநாயகம் பயன்படுத்தும் சிறந்த நடைமுறைகளை வெளிநாட்டு தேர்தல் நிர்வாக அமைப்புகளுக்கு அறிமுகப் படுத்த இந்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது. தலைமை தேர்தல் ஆணையர் திரு ராஜீவ்குமார், மற்றும் தேர்தல் ஆணையர்கள் திரு ஞானேஷ்குமார், மற்றும் டாக்டர் சுக்பீர் சிங் சந்து ஆகியோர் நாளை பிரதிநிதிகள் மத்தியில் உரையாற்றுகின்றனர். பின்னர் இப்பிரதிநிதிகள் மகாராஷ்ட்ரா, கோவா, குஜராத், கர்நாடகா, மத்திய பிரதேசம் மற்றும் உத்தர பிரதேசம் ஆகிய 6 மாநிலங்களுக்கு சென்று பல்வேறு தொகுதிகளில் நடைபெறும் தேர்தல் மற்றும் அதுதொடர்பான ஆயத்தப் பணிகளை கண்காணிப்பார்கள்.

***<u>பஞ்சாயத்து ராஜ்</u>***

நியுயார்க்கில் நேற்று நடைபெற்ற சிபிடி 57 துணை நிகழ்வில் பஞ்சாயத்து ராஜ் நிறுவனங்களின் தேர்ந்தெடுக்கப்பட்ட 3 பெண் பிரதிநிதிகள் பங்கேற்றனர். 3 புகழ்பெற்ற பெண் பஞ்சாயத்து தலைவர்களான திருமதி சுப்ரியா தாஸ் தத்தா, திருமதி குனுகு ஹேமா குமாரி மற்றும் திருமதி நீரு யாதவ் ஆகியோர் குழந்தை திருமணத்தை எதிர்த்து போராடுவது, கல்வியை ஊக்குவித்தல், நிதி உள்ளடக்கம், வாழ்வாதார வாய்ப்புகள், சுற்றுச்சூழல் நிலைத் தன்மை மற்றும் விளையாட்டு போன்ற முன் முயற்சிகள் மூலம் பெண்கள் மற்றும் சிறுமிகளுக்கு அதிகாரம் அளிக்கும் அவர்களின் அற்புதமான பணிகளால் ஈர்க்கப்பட்டனர். நீடித்த வளர்ச்சி இலக்குகளை உணர்ந்து கொள்வதில் பெண்களின் தலைமைத் துவத்தின் விடாமுயற்சி மற்றும் தாக்கத்தை அவர்களின் வாழ்க்கை மற்றவர்களுக்கு எடுத்துக் காட்டாக அமைகிறது.

## ராணுவம்

இந்திய-திபெத் எல்லைப் பாதுகாப்பு படைப் பிரிவில் பணியாற்றி வந்த காரைக்கால் திருப்பட்டிணத்தைச் சேர்ந்த இந்திய ராணுவ வீரர் பிரேம்குமார் இந்திய சீன எல்லைப் பகுதியில் பணியில் ஈடுபட்டிருந்த போது, எதிர்பாராத விதமாக உயிரிழந்தார். இந்த செய்தி பெரும் அதிர்ச்சியையும் வருத்தத்தையும் தருவதாக புதுச்சேரி துணை நிலை ஆளுநர் திரு சி பி ராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார். நாட்டின் எல்லையைப் பாதுகாக்கும் பணியில் தனது உயிரை இழந்த ராணுவ வீரருக்கு புதுச்சேரி மக்கள் சார்பாக வீர வணக்கமும், அஞ்சலியும் செலுத்துவதாக அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

## தேர்தல் ஆணையம்

நாட்டில் வரும் 7-ஆம் தேதி முதல் 5 கட்டங்களில் நடைபெற உள்ள மக்களவை தேர்தலில் வாக்குப் பதிவை பெருமளவு அதிகரிக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது. தமிழகம் உள்ளிட்ட 21 மாநிலங்கள், மற்றும் யூனியன் பிரதேசங்களில் நடைபெற்ற முதல் கட்ட தேர்தலில் 66.14 சதவிகிதமும், கேரளா, கர்நாடகா உள்ளிட்ட 13 மாநிலங்களில் நடைபெற்ற 2-ஆம் கட்ட தேர்தலில் 66.71 சதவிகிதமும், வாக்குகள் பதிவான நிலையில் எஞ்சிய தேர்தலிலும் வாக்குப் பதிவு சதவிகிதத்தை அதிகரிப்பதற்கான முனைப்பு நடவடிக்கைகளை தேர்தல் ஆணையம் மேற்கொண்டுள்ளது.

## வெங்காயம்

வெங்காய ஏற்றுமதிக்கான தடையை இன்று மத்திய அரசு நீக்கி உள்ளது. வெளிநாட்டு வர்த்தக இயக்குநரகம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில், இந்த உத்தரவு உடனடியாக அமலுக்கு வருவதாகவும், ஒரு மெட்ரிக் டன்னுக்கு குறைந்தபட்ச ஏற்றுமதி விலை 550 அமெரிக்க

டாலர்களுக்கு உட்பட்டது என்றும் தெரிவித்துள்ளது. கடந்த மாதம் வங்கதேசம், ஐக்கிய அரபு அமீரகம், பூட்டான், பெகரைன், மொரீசியஸ் மற்றும் இலங்கை ஆகிய 6 நாடுகளுக்கு 99 ஆயிரம் மெட்ரிக் டன் வெங்காயத்தை ஏற்றுமதி செய்ய மத்திய அரசு அனுமதி அளித்தது. மேற்கு ஆசியா மற்றும் சில ஐரோப்பிய நாடுகளின் ஏற்றுமதி சந்தைகளுக்காக பிரத்யேகமாக பயிரிடப்பட்ட 2 ஆயிரம் மெட்ரிக் டன் வெள்ளை வெங்காயத்தை ஏற்றுமதி செய்யவும் அரசாங்கம் அனுமதி அளித்துள்ளது.

***<u>வானிலை</u>***

அடுத்த 2 நாட்களில் மேற்குவங்கம் கடலோர கர்நாடகா, தமிழ்நாடு, புதுச்சேரி, காரைக்கால், மாகே ஆகிய பகுதிகளில் வெப்பம் மற்றும் ஈரப்பதமான வானிலை நிலவக்கூடும் என்று இந்திய வானிலை மையம் தெரிவித்துள்ளது. அடுத்த 7 தினங்களுக்கு தென்னிந்திப் பகுதிகளின் மேல் நிலவும் வளிமண்டல கீழடுக்கு சுழற்சி காரணமாக தமிழகத்தின் ஓரிரு இடங்களிலும், புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் இடி மின்னல் மற்றும் பலத்த காற்றுடன் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

***<u>ஐபிஎல்</u>***

ஐபிஎல் கிரிக்கெட் தொடரில் இன்று இரவு 7.30 மணிக்கு பெங்களூரில் உள்ள சின்னசாமி மைதானத்தில் நடைபெறும் ஆட்டத்தில் பெங்களுரு அணி குஜராத் அணியை எதிர்கொள்கிறது.